பர்கூர் மலை கிராமத்தில்

பள்ளி இடைநின்ற 22 பேரில் 16 பேர் மீண்டும் பள்ளியில் சேர்ப்பு

பெற்றோருக்கு பாராட்டு

▶ பர்கூர் மலை கிராமத்தில் பள்ளிக்கு செல்லாமல் இடையில் நின்ற பழங்குடியின மாணவர்கள் மீண்டும் பள்ளிக்கு அனுப்பி வைத்த பெற்றோருக்கு பொன்னாடை அணிவிக்கும் சுடர் அமைப்பினர்.

அந்தியூர், பிப்.20: பர்கூர் மலை கிராமத்தில் பள்ளி இடைநின்ற மாணவிகள் 16 பேர் மீண்டும் பள்ளியில் சேர்ந்ததால் பெற்றோரை அதிகாரிகள் பாராட்டினர்.

ஈரோடு மாவட்டம் அந்தியூர் அடுத்துள்ள பர்கூர் மலைப்பகுதி தமிழக-கர்நாடக மாநில எல்லையோரம் உள்ளது. இங்கு கொங்காடை, ஓசூர், தாமரைக்கரை, தேவர் மலை, மடம், கோயில் நத்தம் உள்ளிட்ட 33க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளன.

இங்கு வசிக்கும் மலைவாழ் மக்களின் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று இடையில் நின்ற குழந்தைகள் 22 பேரை ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரி, பழங்குடியின நல மையம், தன்னார்வமைப்பான சுடர் ஆகியவை இரண்டு நாள் ஈரோட்டிற்கு கல்வி சுற்றுலா அழைத்து சென்றனர்.

இதில், ஈரோட்டில் பல்வேறு இடங்களில் இருந்த கல்வி கற்க நம்பிக்கை தரும் இடங்களுக்கு அழைத்து சென்று உற்சாகப்படுத்தினர். பின்னர் தங்களது மலை கிராமத்துக்கு திரும்பிய பள்ளி குழந்தைகள் முதற்கட்டமாக 2 பேர் கொங்காடை அரசு பள்ளிக்கும், ஓசூர் ஆரம்ப பள்ளிக்கு 7 பேரும் சேர்ந்தனர்.

அதன் பின், பர்கூர் ஆரம்ப பள்ளிக்கு மேலும் 7 பேர் என 22 பேரில் 16 பேர் திரும்ப படிப்பதற்காக பள்ளிக்கு செல்ல சேர்ந்தனர். பர்கூர் மலை கிராமத்தில் பழங்குடியின குழந்தைகள் 22 வரை கல்வி சுற்றுலாவுக்கு அழைத்து சென்றதன் மூலம் மீண்டும் படிப்பதற்கு ஆர்வம் ஏற்பட்டு, 16 பேர் பள்ளிக்கு சென்ற சம்பவம் மலைவாழ் மக்களிடத்தில் நம்பிக்கையை உருவாக்கி உள்ளது.

இதில், பள்ளிக்கு திரும்ப அனுப்பிய பெற்றோர்களுக்கு சுடர் அமைப்பு சார்பில் பொன்னாடை அணிவித்து வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேற்கூரையை பிரித்து

பீடா, பிரியாணி கடையில் பணம் திருட்டு

மர்ம நபர்களுக்கு போலீஸ் வலை

ஈரோடு, பிப். 20: ஈரோடு பஸ் ஸ்டாண்ட் அருகே பிரியாணி கடை மற்றும் பீடா கடையின் மேற்கூரையை பிரித்து பணம் மற்றும் பொருட்களை திருடிய மர்மநபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

ஈரோடு பஸ் ஸ்டாண்ட் அருகே வீரபத்திர வீதியில் பிரியாணி கடை செயல்பட்டு வருகிறது. இதற்கு எதிரே பீடா கடையும் உள்ளது. நேற்று முன்தினம் இரவு வழக்கம் போல் கடையை பூட்டி விட்டு சென்றனர். இதில், பிரியாணி கடை ஊழியர்கள் நேற்று காலை வழக்கம்போல் கடையை திறந்தபோது, கடையின் மேற்கூரை பிரிக்கப்பட்டிருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்து அருகே சென்று பார்த்தனர். அப்போது, கடையின் தகர ஷீட் மற்றும் தெர்மாகூல் சீட்டினை ஓட்டை போட்டு பிரித்து, மர்மநபர்கள் கடைக்குள் புகுந்து கல்லாபெட்டியை பார்த்துள்ளனர் ஆனால், கடையில் பணம் ஏதுவும் இல்லாததால், பிரியாணி செய்ய வைத்திருந்த வெங்காயம், தக்காளியை எடுத்து சென்றனர்.

இதேபோல் எதிரே உள்ள பீடா கடையில் பீடி, சிகரெட் பாக்கெட்டுகள் மற்றும் ரூ.2,500 ரொக்கத்தையும் திருடி சென்றது தெரியவந்தது. இதுகுறித்து ஈரோடு வடக்கு போலீசார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

டி.என்.பாளையத்தில்

100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா

▶ கோபி அருகே உள்ள டி.என்.பாளையத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் மாவட்ட செயலாளர் நல்லசிவம், டி.என்.பாளையம் தெற்கு ஒன்றிய செயலாளர் கொங்கர்பாளையம் சண்முகம், வாணிப்புத்தூர் பேரூராட்சி தலைவர் சிவராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கோபி, பிப். 20: கோபி அருகே உள்ள டி.என்.பாளையத்தில் 100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது.

டி.என்.பாளையத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சமூகநலத்துறை சார்பில் டி.என்.பாளையம் வட்டார ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலகம் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் ஈரோடு வடக்கு மாவட்ட திமுக செயலாளர் நல்லசிவம், டி.என்.பாளையம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கொங்கர்பாளையம் சண்முகம், வாணிப்புத்தூர் பேரூராட்சி தலைவர் சிவராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், வாணிப்புத்தூர் பேரூர் கழக திமுக நிர்வாகிகள், டி.என்.பாளையம் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காதலியை ஏற்காட்டிற்கு அழைத்த விவகாரம்

அந்தியூர் டாக்டர் மீது சரமாரி தாக்குதல் 3 பேர் கும்பல் வெறிச்செயல்; ஒருவர் கைது

அந்தியூர், பிப். 20: காதலியை ஏற்காட்டிற்கு அழைத்த விவகாரத்தில் ஏற்பட்ட மோதலில் 2 மருத்துவர்களை 3 பேர் கும்பல் சரமாரியாக தாக்கினர். ஒருவரை போலீசார் கைது செய்த நிலையில், மேலும் 2 பேரை தேடி வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம் அந்தியூரை சேர்ந்தவர் நித்தீஷ் (27). இவரது நண்பர் திண்டுக்கல் மாவட்டம் பழநியை சேர்ந்த மோகன் (29). இவர்கள் இருவரும் சேலத்தில் எம்பிபிஎஸ் படித்து முடித்துவிட்டு, மருத்துவர்களாக பணியாற்றி வருகின்றனர். சேலத்தில் மருத்துவம் படிக்கும் போது நித்தீஷ், ஒரு இளம் பெண்ணை காதலித்து வந்துள்ளார். அந்த காதலியை பார்க்க கடந்த 17ம் தேதி நித்தீஷ், தனது நண்பர் மோகனுடன் வந்துள்ளார். இருவரும் அரியானூர் பகுதியில் நின்றுகொண்டு, நித்தீசின் காதலிக்கு போன் செய்து, ஏற்காட்டிற்கு போகலாம் என்றும், வரும் போது தோழி ஒருவரை அழைத்துக் கொண்டு வரும்படியும் கூறியுள்ளனர்.

பின்னர் சிறிது நேரத்தில் அவர்கள் நின்றிருந்த இடத்திற்கு, அந்த தோழியின் காதலனான சேலம் பூலாவரியை சேர்ந்த ஹரிஹரன் உள்ளிட்ட 3 பேர் வந்தனர். அவர்கள், உங்களுடன் எனது காதலி எதற்கு ஏற்காட்டிற்கு வர வேண்டும் எனக்கேட்டு நித்தீஷ், மோகனிடம் தகராறு செய்துள்ளனர். அதில், 3 பேரும் சேர்ந்து நித்தீஷ், மோகனை சரமாரியாக தாக்கினர். அங்கிருந்தவர்கள், அந்த தகராறை விலக்கிவிட்டனர். பின்னர் படுகாயமடைந்த நித்தீஷ், மோகன் ஆகிய இருவரும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தனர்.

இதுபற்றி கொண்டலாம்பட்டி போலீஸ் எஸ்ஐ ஆனந்த் தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தினர். அதில், காதலியை ஏற்காட்டிற்கு அழைத்த விவகாரத்தில் 2 மருத்துவர்களையும் சரமாரி தாக்கிய ஹரிஹரன், அவரது நண்பர்களான கிருபா, விஜய் ஆகிய 3 பேர் மீதும் 4 பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். தொடர்ந்து நேற்று முன்தினம் ஹரிஹரனை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். பின்னர் அவரை சேலம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி, மத்திய சிறையில் அடைத்தனர். கிருபா, விஜய்யை போலீசார் தேடி வருகின்றனர்.

திமுகவுடன் கூட்டணி தேமுதிகவினர் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்

▶ திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்ததையொட்டி ஈரோட்டில் தேமுதிக மாவட்ட செயலாளர் ஆனந்த் தலைமையில் தொண்டர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடினர்.

ஈரோடு, பிப்.20: திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்ததையடுத்து, அக்கட்சியினர் நேற்று பட்டாசு வெடித்து கொண்டாடினர்.

சட்டமன்ற தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிக உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் உள்ளனர். இந்த நிலையில், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் நேற்று திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இணைந்திருப்பதாக அறிவித்தார்.

இதையடுத்து, அக்கட்சியினர் ஈரோடு, சத்தி ரோட்டில் உள்ள ஸ்வஸ்திக் கார்னர் அருகில் நேற்று மாலை தேமுதிக மாநகர் மாவட்டச்செயலாளர் ஆனந்த் தலைமையில் அக்கட்சியினர் பட்டாசு வெடித்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மேலும், அங்கிருந்த பொதுமக்களுக்கு இனிப்புகளையும் வழங்கினர்.

தேசிய அளவிலான என்ஐஎஸ்எம் ஐடியாதான் போட்டி

கொங்கு பொறியியல் கல்லூரிக்கு ரூ.2.5 லட்சம் பரிசு

▶ தேசிய அளவிலான என்ஐஎஸ்எம் ஐடியாதான் 2025ல் கொங்கு பொறியியல் கல்லூரிக்கு ரூ.2.5 லட்சம் பரிசு வழங்கினர்.

ஈரோடு, பிப்.20: ஈரோடு மாவட்டம் பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரியின் மேலாண்மைத் துறை, இணைய பாதுகாப்பு மற்றும் முதலீட்டாளர் விழிப்புணர்வு என்ற தலைப்பில், என்ஐஎஸ்எம்ஐடியாதான் 2025 என்ற போட்டி நடைபெற்றது. இதில் அக்கல்லூரியின் மேலாண்மைத் துறை தேசிய அளவில் முதலிடம் பெற்று அசத்தியுள்ளது.

'திரும்பப் பெறும் பரிவர்த்தனை முறையை பயன்படுத்தி மோசடி பணப்பரிவர்த்தனைகளைத் தடுக்கும் இணைய பாதுகாப்பு தீர்வு' என்ற தலைப்பில் உருவாக்கப்பட்ட இவர்களின் திட்டம், மின்னணு நிதி மோசடிகளைத் தடுக்கும் புதுமையான அணுகுமுறையையும், முதலீட்டாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் திறனையும் வெளிப்படுத்தியது. இரண்டாம் ஆண்டு மேலாண்மை முதுநிலை படிப்பு மாணவர்கள் ஸ்ரீஸ்வேதா, பிரியங்கா, ரேவந்த்குமார் ஆகியோர் கொண்ட குழு இந்த சாதனைக்காக ரூ.2.5 லட்சம் பரிசை பெற்றனர்.

இத்திட்டத்திற்கு மேலாண்மைத்துறை உதவி பேராசிரியர் டாக்டர் ஆர். மகேஸ்வரி வழிகாட்டியாக இருந்தார். கல்வி நிறுவனத்திற்கு பெருமை சேர்த்த இந்த புதுமையான சமூகப் பயனுள்ள சாதனைக்காக மாணவர்களையும், வழிகாட்டி பேராசிரியரையும் கல்லூரி தாளாளர் ஈ.ஆர். கே.கிருஷ்ணன் மற்றும் முதல்வர் ஆர்.பரமேஸ்வரன் ஆகியோர் பாராட்டினர்.

மது, கஞ்சா, குட்கா விற்ற 6 பேர் கைது

ஈரோடு, பிப்.20: ஈரோடு மாவட்டத்தில் சட்ட விரோதமாக மது, கஞ்சா, குட்கா விற்பனையை தடுக்கும் வகையில் போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில், மாவட்டத்தில் நேற்று முன்தினம் போலீசார் சோதனை மேற்கொண்டனர். இதில், சட்ட விரோதமாக மது விற்ற, ஈரோடு அடுத்த சீனாபுரத்தை சேர்ந்த துரைசாமி (52), கோபி அடுத்த நாகர் பாளையத்தை சேர்ந்த ஜெய் பிரசாத் (41), ஆகியோரை கைது செய்த போலீசார், அவர்களிடம் இருந்த 47 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

பங்களாபுதூரை அடுத்த துரையம்பாளையம் பகுதியில் கஞ்சா விற்ற, ஏரங்காட்டூரை சேர்ந்த ஸ்ரீதரை (21), கைது செய்த போலீசார், அவரிடம் இருந்த 200 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

இதேபோன்று மளிகை கடையில் குட்கா விற்ற, பெருந்துறை அடுத்த கே.எஸ்.பாளையத்தை சேர்ந்த துளசிமணி (73), கர்நாடாக மாநிலத்தை சேர்ந்த சுதீப் நாயக் (25), பவானிசாகர் அடுத்த பழையதோட்டத்தை சேர்ந்த சுப்பையன் (76), ஆகியோரை கைது செய்த போலீசார், 3 கிலோ குட்கா பொருட்களை பறிமுதல் செய்தனர்.

இன்ஸ்பெக்டர் பொறுப்பேற்பு

சத்தியமங்கலம், பிப்.20: சத்தியமங்கலம் உட்கோட்டம் தாளவாடி காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வந்த ஆனந்த் ஈரோடு சைபர் கிரைம் பிரிவிற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

இதைத்தொடர்ந்து திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்த இன்ஸ்பெக்டர் ராதாகிருஷ்ணன் தாளவாடி காவல் நிலையத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்ட நிலையில், நேற்று இன்ஸ்பெக்டர் ராதாகிருஷ்ணன் தாளவாடி காவல் நிலையத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கொடுமுடி-ஒத்தக்கடை சாலையின் குறுக்கே

பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க கோரிக்கை

▶ கொடுமுடி ஒத்தக்கடை சாலையின் இடது மற்றும் வலது ஆகிய இரண்டு புறங்களிலும் தடுப்புகள் அமைக்கப்பட்டு சாலை குறுகலாக உள்ளது.

கொடுமுடி, பிப்.20: கொடுமுடி-ஒத்தக்கடை சாலையின் குறுக்கே பாலம் காட்டுமான பணிகளை விரைந்து முடிக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈரோடு மாவட்டம் கொடுமுடியிலிருந்து ஒத்தக்கடை செல்லும் முக்கிய சாலையின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பாலம் கட்டுமான பணிகள் கடந்த 2 வாரங்களாக நடைபெற்று வருகிறது.

தினமும் பள்ளி கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்கள், வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள் மற்றும் பஸ்கள், லாரிகள் அனைத்தும் இப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர். சாலையின் இடது மற்றும் வலது ஆகிய இரண்டு புறங்களிலும் தடுப்புகள் அமைக்கப்பட்டு சாலை குறுகலாக உள்ளதால் வாகன ஓட்டிகளுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

மேலும், இரவு நேரங்களில் போதிய வெளிச்சம் இல்லாததால் விபத்து அபாயமும் அதிகரித்துள்ளது. இதனால், நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்களின் சிரமத்தை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கஞ்சா வியாபாரிக்கு மூன்றாண்டு சிறை

ரூ.25 ஆயிரம் அபராதம்

ஈரோடு, பிப். 20: தேனி மாவட்டம் வடுகபட்டி காளியம்மன் கோயில் வீதியை சேர்ந்தவர் கருப்பையா (43). இவர் கடந்த 2021ம் ஆண்டு, அந்தியூர் அடுத்த சின்னதம்பிபாளையம் பஸ் ஸ்டாப்பில், 2 கிலோ கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்தார்.

இதனையறிந்த போலீசார், அவரை கைது செய்து, கஞ்சாவை பறிமுதல் செய்திருந்தது. இது தொடர்பான வழக்கு, கோவை அத்தியாவசிய பொருட்கள் சட்ட சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வந்தது. இந்நிலையில், இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த நிலையில், கருப்பையாவிற்கு மூன்றாண்டுகள் சிறை தண்டனையும், ரூ.25 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. தொடர்ந்து, கோவை மத்திய சிறையில் கருப்பையா அடைக்கப்பட்டார்.

OMKARA
ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்

CIN: U67100TZ2014PTC020363

பதிவு அலுவலக முகவரி: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்-641607.
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
மின்னஞ்சல்: karthigovindasamy@omkaraarc.com,|தொலைபேசி எண்: 044-24323033
அதிகாரப்பூர்வ அதிகாரிகள் கைபேசி எண்: + 91 93446 84194/ 98840 62068/ 99623 33307

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) & 9(1) விதிகளை காணவும்]

அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை பொது அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஓஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஓஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) ஃபுல்லெர்ட்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (உரிமையீந்தோர் நிறுவனம்) வசமிருந்து 26.02.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஓஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஓஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப-கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஓஏஆர்பிஎல்-க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர் & உப கடன்தாரர் பெயர்	ரு. S. பெருமாள் (கடன்தாரர்), திருமதி. P. தனபாக்கியம் (உப கடன்தாரர்) மற்றும் திரு. P. ஜெயபிரகாஷ் (உப கடன்தாரர்)

கடனீட்டுச் சொத்து விவரங்கள்– அம்மாபேட்டை சார் பதிவு அலுவலக ஆவண எண்.260/2011, தேதி 02.02.2011 இன்படி திரு. S. பெருமாள் அவர்களுக்குச் சொந்தமான சொத்து.
ஈரோடு பதிவு மாவட்டம், அம்மாப்பேட்டை சார் பதிவு மாவட்டம், ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், கேசரிமங்கலம் கிராமம், துணைப் பிரிவின்படி R.S.No. 341/1A (R.S.No. 341/1) Pa.Ka.Sa.268–A,B.C.D,E), புன்செய் ஹெக்டேர் 1.37.5 ஏர்ஸ் கிஸ்த் ரூ.4.65 இல் உள்ள சொத்து, பின்வரும் எல்லைகளுக்குள்: மேற்கு மற்றும் வடக்கு: விற்பனையாளர் வீட்டு மனைகள், கிழக்கு: மாதப்பன் வீடு, தெற்கு: 8 அடி கிழக்கு மேற்கு வண்டிப் பாதை, அளவீடு: கிழக்கி–லிருந்து மேற்காக இரு பக்கங்களிலும் 61 அடி, வடக்கிலிருந்து தெற்காக இரு பக்கங்களிலும் 43 அடி, மொத்தப் பரப்பளவு 243.68 ச.மீட்டர் அல்லது 2623 சதுரடி நிலம் வழக்கமான பாதை வண்டிப்பாதை மீது உரிமை, பயன்பாட்டு உரிமைகள் ஏனையவற்றுடன் உள்ள மேற்கூறிய சொத்து கேசரிமங்கலம் கிராம ஊராட்சி மற்றும் அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்துக்குள் அமைந்துள்ளது.

சொத்து உரிமையாளர்:	திரு. S. பெருமாள், த/பெ, திரு. செங்கா கவுண்டர்		
13(2) அறிவிப்பு நாள்	கையக சுவாதீனம் நாள்	19.02.2026 தேதியின்படி நிலுவைத் தொகை	
08.02.2022	10.12.2025	ரூ.48,24,144/– (ரூபாய் நாற்பத்தெட்டு லட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று நாற்பத்து நான்கு மட்டும்)	
நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை– நிர்ணயவிலையில் 10%	ஏலம் உயர்த்தும் தொகை	சொத்தைப் பார்வையிடும் தேதி மற்றும் நேரம்:
ரூ.16,50,000/– (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	ரூ.1,65,000/– (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்	ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)	அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்கூட்டிய அனுமதியுடன். தலைப்பில் செல்பேசி எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
கணக்கு விவரங்கள்:	கணக்கு எண்.344905000929, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ் 22/2020–21 ட்ரஸ்ட், வங்கியின் பெயர்: ஐசிஐசிஐ பேங்க், கிளை: பாந்த்ரா(கி), மும்பை, IFSC Code:ICIC0003449		
மின்–ஏலம் நாள் & நேரம்	ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்		
25 மார்ச் 2026 (புதன் கிழமை) 10.00 A.M. முதல் 11.00 A.M. வரை.	23 மார்ச் 2026 (திங்கள் கிழமை) பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக		

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஓஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 20.02.2026 தேதி முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 30 (முப்பது) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

கார்த்தி கோவிந்தசாமி,
அதிகாரப்பூர்வ அதிகாரி,
கைபேசி எண். 9344684194
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)

நாள்: 20.02.2026
இடம்: சென்னை